RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# புதின உருவாக்கத்தில் ராஜம் கிருஷ்ணன்

தி. பிரகாசி மேரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர் 628 215, இந்தியா

# Rajam Krishnan in the Creation of a Novel

D. Prakasi Mary [a, *]

[a] Department of Tamil, Govindammal Aditanar college for women, Tiruchendur 628215, India

* Corresponding Author: dprakasimary13@gmail.com

Received: 13-11-2025
Revised: 24-02-2026
Accepted: 04-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Among Tamil novel writers, Rajam Krishnan is a notable woman writer. Rajam Krishnan struggled within a joint family environment and rose to prominence in the literary world. Her first short story, "Velli Tumbler," was published in 1946. Writing about contemporary social issues is a distinctive feature of Rajam Krishnan's work. She has addressed many issues such as sexual violence, female oppression, and violence against children, and she has also presented solutions to these problems in her novels.

**Keywords:** Novel, Writing style, Reform, Violence

## முன்னுரை

இக்கால தமிழ் இலக்கிய வகைகளுள் புதினமும் ஒன்று தமிழ்ப் புதின எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர் இராஜம் கிருஷ்ணன் அவர்கள். தமிழ் நாவல் உலகில் ஒரு அழுத்தமான அழியாத இடம் அவருக்கு உண்டு. படைப்பாளிகளில் பலவகை உண்டு. கற்பனையிலேயே படைப்புகளை உருவாக்குபவர்கள் ஒருவகை. படைப்பிலிலக்கியத்திற்குத் தேவையான விவரங்களைச் சேகரித்து படைப்பிற்குரிய சூழலில் வாழ்ந்து, பின்னர் புதினம் அல்லது சிறுகதை எழுபவர்கள் மற்றொருவகை இதில் இராஜம் கிருஷ்ணன் இரண்டாம் வகையைச் சேர்ந்தவர். அவர் தாம் படைத்த ஒவ்வொரு புதினத்திற்குப் பல இடங்களுக்குச் சென்று விவரங்கள் சேகரித்த பின்னரே புதினம் எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பெண்களது வாழ்வை மிக நுணுக்கமாக, சரளமான தமிழ் நடையில் சித்தரித்தவர். 'பெண்குரல்' என்ற அவரது முதல் நாவலை 'கலைமகள்' நாராயணசாமி அய்யர் பரிசுக்கு உகந்ததாகத் தேர்வு செய்து தமிழ் நாவல் உலகிற்கு ஒரு படைப்பாளியை அறிமுகம் செய்தார். அதன் பின்னர் அவரது எழுதுகோலிற்கு அவர் ஒய்வே கொடுக்கவில்லை எனலாம். கடைசி ஒரு சில ஆண்டுகள் தவிர மற்ற நேரங்களில் அவர் எழுதிக் கொண்டே இருந்தார். இவ்வாறு புதின நூல்கள் பல எழுதுவதிலேயே அவர் ஒய்வே கொடுக்கவில்லை எனலாம். கடைசி ஒரு சில ஆண்டுகள் தவிர மற்ற நேரங்களில் அவர் எழுதிக் கொண்டே இருந்தார். இவ்வாறு புதின நூல்கள் பல எழுதுவதிலேயே தன் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கரைத்துக் கொண்ட இராஜம் கிருஷ்ணன் அவர்களின் புதினங்கள் எந்த வகையைச் சார்ந்தவை என்பது பற்றியும், புதினங்களில் பேசப்படும் கதைக்கரு குறித்தும், சீர்திருத்தப் போக்குகள் குறித்தும், அவரின் எழுத்து நடை குறித்தும் விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## அறிமுகம்

திருச்சி மாவட்டம் முசிறியில் 05.11.1925 ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர்கள் யஞ்ஞ நாராயணன், மீனாட்சி இவரது பூர்விகம் நெல்லை மாவட்டமாகும். இவர் முறையான பள்ளிக் கல்வியைப் பெறவில்லை எனினும் ஆங்கிலம், தமிழ், இந்தி ஆகிய மொழிகளைத் தானாகவே வாசிக்கும் வழக்கத்தினைக்

கொண்டிருந்தார். 15 வயதில் திருமணம் செய்து ஊட்டி, கோவா, குந்தா போன்ற இடங்களுக்குச் சென்றிருக்கின்றார். 1946 ஆம் ஆண்டு முதல் பத்திரிக்கையில் எழுதி வருகிறார். 21.10.2014 அன்று இராஜம் கிருஷ்ணன் உயிர் துறந்தார்.

## இலக்கிய உலகம்

இராஜம் கிருஷ்ணன் அவர்கள் கூட்டுக்குடும்பச் சூழலில் போராடி எழுத்துலகுக்கு வந்தார். அவரின் முதல் சிறுகதை 'வெள்ளி டம்ளர்' 1946-ல் வெளிவந்தது. 1948-ல் 'சுதந்திர ஜோதி' என்ற நாவல் மூலம் எழுத்துலகில் நாவலாசிரியராக அறிமுகமானார். 40-க்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார். சிறுகதை, வாழ்க்கை வரலாறு, வானொலி நாடகங்கள், மொழி பெயர்ப்பு நூல்கள், சிறுவர் இலக்கியம் போன்ற பல துறைகளில் தன் பங்களிப்பினை அளித்துள்ளார். சமகாலப் பிரச்சனைகளை எழுதுவதே இராஜம் கிரு~;ணனின் தனித்தன்மையாகும்.

## நாவல்களின் வகைப்பாடு

இராஜம் கிருஷ்ணன் எழுதிய நாவல்களை சமூக நாவல்கள், வட்டார நாவல்கள் என வகைப்படுத்தலாம். பாலியல் வன்முறை, பெண்ணடிமை, சிறார்கள் மீதான வன்முறை இவை போன்ற பல பிரச்சனைகளைப் பற்றி பேசுவதோடு அப்பிரச்சனைகளுக்கான தீர்வினையும் தம் நாவலில் எழுதியிருக்கின்றார். சேற்றில் மனிதர்கள், கரிப்பு மணிகள், அலைவாய்கரையில் ஆகிய நாவல்கள் சமூக நாவல்களாகப் பார்க்கப்படுகின்றன. அந்தந்த வட்டார மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள் ஆகியன பற்றி தம் வட்டார நாவல்களில் படைத்துள்ளார். குறிஞ்சித்தேன், வளைகரம், கரிப்பு மணிகள் ஆகியன அவர்தம் வட்டார நாவல்களுக்குச் சான்றாக அமைகின்றன.

## மையக்கரு

இராஜம் கிருஷ்ணனின் நாவல்களில் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் முதன்மை பெருவதைக் காணலாம். அகில உலகப் பெண்கள் ஆண்டான 1975க்குப் பிறகு இவரது நாவல்களில் பெண்ணுரிமை பற்றிய சிந்தனைகள் உணர்ச்சி வேகத்தோடு வெளிப்படுவதைக் காண முடிகின்றது. உண்மைகளைக் கண்டும் உணர்வுகளைக் கொண்டும் எழுதிய இவர் தம் நாவல்களில் பொருளியல், சமூகவியல், கலையியல், அறிவியல், வாழ்க்கை நிலை என்ன என்று கண்டு சீரான வாழ்வுக்குரிய வேர் எது என்று சுட்டிக் காட்டுகின்றார்.

### 1) வர்க்கப்போராட்டம்

சேற்றில் மனிதர்கள் புதினத்தில் உழவர் வாழ்வின் உழைப்பும் அவர்களின் நிலையும், சாதீய வர்க்கப் பாகுபாட்டின் மூலம் மேல்வர்க்கம் அடித்தள வர்க்கத்தை அமுக்கி அடக்குவதும் சித்தரிக்கப்பட்டுள்ளது. கரிப்பு மணிகள் புதினமும் வர்க்கப் போராட்டத்தை முன்வைத்து எழுதப்பட்டதாகும்.

### 2) பெண் சிசுக்கொலை

இன்றைய சமுதாயத்தில் ஆண் உயர் மதிப்புப் பெற்றிருப்பதுபோல பெண் உயர்மதிப்பும் பெற்றிருக்கும் வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. பால்வேறுபாடு காட்டி பெண்ணினம் அழிக்கப்படுகிறது எனும் கருத்தினை வலியுறுத்தும் வகையில் 'ஆண்களோடு பெண்களும்' என்ற புதினம் அமைகின்றது. தாய்ப்பாலுண்டு தவழ்ந்து வளர வேண்டிய பெண் சிசுக்களை எருக்கம் பாலிட்டு குழியில் போடும் அவலம் சமுதாயத்தில் நடப்பதை 'மண்ணகத்துப் பூச்சிகள்' எனும் நாவல் எடுத்துரைக்கின்றது. பெண் குழந்தை சுமையாக, விரும்பத்தகாததாக, செலவாக கவலையுடையதாக எதிர்காலத்தில் அப்பெண்ணைத் திருமணம் செய்து வைப்பதுவரை பாதுகாக்கக் கூடியதாக மிகுந்த பொறுப்புகளுடன் வளர்க்க வேண்டியநிலை இருப்பதால் பால்வேறுபாடு காட்டி பெண்பிறவி தவிர்க்கப்படுகிறது என்ற சமூக உண்மைகளையும் மறைமுகமாக ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

## சீர்திருத்தக் கருத்துக்கள்

இராஜம் கிருஷ்ணன் அவர்கள் புதினம் குறித்து 'புதினம் என்பது ஒரு சமுதாய மாற்றத்தை உருவாக்கும் சாதனம்' என்கிறார். அவர் தமது புதினங்களில் இதனைக் கடைபிடித்தார்.

### 1) சிறுவர்கள் மீதான வன்முறை

கூட்டுக் குஞ்சுகள் புதினத்தில் தீப்பெட்டித் தொழிலாளர்களாகச் சிறுவர்கள் சித்தரிக்கப்படுகின்றனர். காலை 7.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை குழந்தைகளை வேலை வாங்கும் முதலாளித்துவ சமுதாயத்தில் அவர்களுக்குத் தகுந்த ஊதியமும் அடிப்படைச் சலுகைகளும் தரப்படாத நிலையில் உடலும், மனமும் நொறுங்கும் அவலம் குழந்தைகள் மீதான வன்முறையை எடுத்துரைக்கின்றது. கல்வி கற்று ஓடியாடி விளையாட வேண்டிய இளஞ்சிறார்கள், வறுமையின் கொடுமையால் கூலித் தொழிலாளர்களாக மாறுவது கண்டிக்கப்படுகின்றது.

### 2) பெண்ணடிமை நிலை

இன்றைய சமூக அமைப்பில் பெண்கள் வீட்டிலும், வெளியுலகிலும் விலங்கு மாட்டப்பட்டக் கைதிகள் போன்றுதான் இருக்கின்றார்கள் 'விலங்குகள்' என்ற புதினத்தில் பெண்களின் அடிமை நிலையை 'பெண் மெல்லியல், வீடே அவளுக்குரிய பாதுகாப்பான இடம் என்ற காப்பை, கண்ணுக்குத் தெரியாத விலங்கைப் பூட்டி விடுகிறார்கள். அந்த விலங்கை உடைத்தெரியத் துணிவின்றி வெளியே செல்லும்போது அதன் சபையில் அஞ்சி சாகிறாள். பல மாயக்கவர்ச்சிக்கும் அடிமையாகிறாள். புரட்சிகரமாக இருக்க வேண்டிய அம்சங்களில் மாற மறுத்துக் காலத்துக்கும் நடைமுறைக்கும் ஒவ்வாத பழைய கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்கும் குடும்பம் எதுவாயினும் அது விலங்காகவே அமையும்' என்ற கூற்றின்மூலம் தெளிவுபடுத்துகின்றனர்.

## கதைமாந்தர் உருவாக்கம்

புதினம் என்றாலே கதைமாந்தர்களும் அவர்கள் தொடர்புடைய நிகழ்ச்சிகளும், உரையாடல்களும் மிகவும் முக்கியமானதாகும். இக்கதை மாந்தர்களை வைத்துதான் கதையின் போக்கு அமையும். அவ்வகையில் கதை மாந்தர்கள் தலைமை மாந்தர்கள், துணை மாந்தர்கள் என இருவகைப்படுத்தலாம். இராஜம் கிருஷ்ணன் புதினங்களிலும் இம்மாந்தர்கள் முக்கியத்துவம் பெருவதோடு தலைமை மற்றும் துணை மாந்தர்கள்தம் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளை எதிர்கொண்டு அவற்றிலிருந்து வெளிவர முயற்சி செய்கின்றனர்.

சான்றுகள்: ஓசைகள் அடங்கிய பிறகு - மீனா, மானுடத்தின் மகரந்தம் - ருக்கு வீடு - தேவி, ரஞ்சனி.

## எழுத்து நடை

இராஜம் கிருஷ்ணனின் புதினங்களில் அவரின் எழுத்துநடை முக்கிய பங்கு வகிக்கிறது. அவருடைய நடை உயிரோட்டமானதாக இருப்பதோடு வாசகரைக் கவரும் வகையில் சிறப்பாக எடுத்துரைக்கும் அவரின் போக்கு மனித மனத்தைக் கவரவல்லது. பிறமொழிச் சொற்களின் கலப்பு இன்றி அவர் எழுதும் முறை சிறப்பானது. மேலும் மண்ணின் மணமே புனிதத்தின் பின்னணியாக நின்று படிப்போரைக் கவர்ந்து இழுக்கும் திறம் வாய்ந்தது அவரின் எழுத்து நடை எனில் அது மிகையன்று.

## முடிவுரை

இராஜம் கிருஷ்ணன் அவர்கள் புதினம் என்பது இன்றைய நெருக்கடி மிகுந்த சமூகச் சூழலில் மக்களின் சிந்தனையை ஆரோக்கியமான நிலையில் ஆக்கப் பூர்வமான செயற்பாடுகளில் நம்பிக்கைக் கொள்ளச் செய்யும் ஓர் இனிய சாதனமாக அமைய வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர். எனவே தமது புதினங்களில் சமுதாயத்தின் இயங்கு நிலையை நுணுக்கமாகக் கண்டறிந்து கூறி அதற்கான தீர்வினையும் கூறிச் செல்கின்றார் என்பது புலனாகின்றது.

## References

தொல்காப்பிம், பொருளதிகாரம், அகத்திணையியல்

டாக்டர் ஆ. இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு

நேசமித்திரன், (2010) கார்ட்டூன் பொம்மைகளுக்குக் குரல் கொடுப்பவன், உயிர்மை பதிப்பகம், சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License